22

21-7-24

ஸன்மார்க்கபோதி மாலா.—மலர் 2.

மார்க்கண்டேயன்.

நந்தன்.

Office of the Registrar of Books, Mad

இது

கோடுமுடி, S. P. வேங்கடேச சர்மாவால்,

இயற்றப்பட்டது.

ஈரோடு,

ீ விலாஸ் கம்பெனி.

1924. [விலை அணா 4.

O23 ::5
N124,
183298

ஸன்மார்க்கபோதி மாலா.—மலர் 2.

மார்க்கண்டேயன்.

நந்தன்.

இது

கோடுமுடி, S. P. வெங்கடேச சர்மாவால்,

இயற்றப்பட்டது.

ஈரோடு,

ஸ்ரீ வாணீ விலாஸ் கம்பெனி.

காபி ரைட்.] 1924. [விலை அணா 4.

முகவுரை.

இந்த அருமையான நூலுக்கு என்னை முகவுரை எழுதும்படி வேங்கடேச சர்மா அவர்கள் விரும்பியது என்னுடைய பாக்கியமென்றே நான் நினைக்கிறேன். இக்காலத்தில், எவர்கள் சிறுவர்களின் மேன்மையை விரும்பி, நம்முடைய நாகரீகத்தின் சிறப்பைப் பாதுகாக்க உழைத்து, நம்முடைய மதத்தை நிலைக்கச் செய்து, நம்முடைய தாய்நாட்டின் பெருமையைக் கோரி பாடுபட்டுவருகிறார்களோ அவர்களே தேசபக்தியிற் சிறந்தவர்கள். அவர்களே புண்யசாலிகள். அவர்களே ஈசன் அருள் பெற்றவர்கள். அவர்களுக்குள் ஒருவராக சர்மா அவர்கள் வெகுநாளாக விடா முயற்சியாக உழைத்து வருவதால் அவர் இப் புத்தகத்தைச் சிறுவர்களுக்காகவும் நம்முடைய நாகரீகம், மதம் இவைகளுடைய மேன்மைக்காகவும், நம்முடைய பாரதமாதாவின் பெருமைக்காகவும் எழுதியது அவருடைய விரிந்து உயர்ந்த மனதை விளக்குகின்றது. அவர் இத்தகைய நல்லவிஷயங்களில் ஊக்கமுள்ளவர் என்று எனக்கு வெகுகாலமாகத் தெரியும். அவர் இப் புத்தகத்திலுள்ள புண்ணிய சரிதங்களை எழுதியது மிகவும் மெச்சக்கூடியவிஷயம்.

அவர் இப் புத்தகத்தில் "துருவன்" "ப்ரஹ்லாதன்" "மார்க்கண்டேயன்" "நந்தன்" இவர்களுடைய சரித்திரங்களை எளிய நடையில் அழகாகவும், உருக்கமாகவும் எழுதியிருக்கிறார். நமக்கு நல்லகுணங்களும் ஈசன் அருளும் வரவேண்டுமென்றால், நல்லகுணங்களும் ஈசன் அருளும் பெற்றவர்களுடைய திவ்ய சரித்திரங்களை வாசித்து அனுபவிப்பதுதான் சரியானவழி. பகவத்கீதையில் "யோ [illegible]ர்ச்சாத்த: ஸ ஏவ ஸ:" என்று

சொல்லியிருக்கிறாரல்லவா? மனதின்நிலே எப்படியோ அப்படியே நாம் இருக்கிறோம். பக்தர்கள் கதைகளை வாசித்தால் நமக்கும் விவேகமும், வைராக்கியமும், மிகுந்து நாமும் ஈசன் அருளைப்பெற்று நம்முடைய நாட்டுக்கும், நாகரீகத்திற்கும் மேன்மையைத் தேடி வைப்போம் என்பதில் ஐயமில்லை.

திருக்குறள் ஆசிரியர் தம்முடைய திருவாக்கினால் "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ னற்றாடொழா அறெனின்" என்றும் "பிறவிப்பெருங்கடனீந்துவர் நீந்தாரிறைவனடி சேராதார்" என்றும், அழகாக உரைத்திருக்கின்றார். அப்படி, கல்வியினால் பிறவிப்பயனையடைந்து பகவத் கடாக்ஷம் பெற்ற பெரியோர்களே நம்முடைய நாட்டுக்கு ஏற்பட்ட முக்கிய அலங்காரமாக நாம் கருதவேண்டும்.

திருவாசகத்தில் மணிவாசகப்பெருமான் "முத்தாவுன்றன் முகவொளிநோக்கி முறுவன்னகை காணவத்தாசால வாசைப்பட்டேன் கண்டாயம்மானே" என்று அருளிச்செய்திருக்கின்றனர். இப்படி கடவுளை விரும்புவது ஜீவனுக்கு இயற்கையான குணம். ஆசையாலும், அவித்தையாலும், இத்தகைய இயற்கை குணம் மங்கியிருந்தாலும், அன்பர்களின் இன்செல்லாலும், பக்தி நூல்களைப்படிப்பதாலும், தீர்த்த க்ஷேத்ரங்களுக்குப் போவதாலும் அந்தகுணம் சாணை பிடித்தாற்போல் ஒளிவீசும் என்பது திண்ணம்.

அப்படி அன்பிற் சிறந்த பக்தர்கள், நம்முடைய புண்ய பூமியான பாரத வர்ஷத்தில் தொன்று தொட்டு, இடைவிடாமல் பிறந்து நம்முடைய தேசத்திற்குத் திலகமாகப் பலர் இருந்தபோதிலும் அவர்க

ளுக்குள் இந்நூலில் சொல்லப்பட்ட பக்தர்கள் மிக வும் மேன்மையுள்ளவர்களாகக் கருதப்பட்டவர்கள்.

துருவன் சரிதத்தில் பாகவதத்தில் "எவனுடைய குணங்களில் ஈடுபட்டு பகவான் ப்ரஸன்னமாகிறாரோ அவனுக்கு உலகமெல்லாம் வணங்கி அவனைக்கொண் டாடும்" என்று சுகப்ரமம் சொல்லியிருக்கிறார்.

ப்ரஹ்லாதன் ஈசன் எங்குமுள்ளவர் என்பதை உணர்ந்து அனுபவித்து உலகத்துக்கெல்லாம் விளக்கிக்காட்டினான். மார்க்கண்டேயர் "விதியை மதியால் வென்றுவிடலாம்" என்றும், ஈசன் அனுக்ரகம் கிடைத்தால் எல்லாம் கைகூடும் என்றும் மெய்ப்பித்திருக்கிறார். நந்தன் சரித்திரத்தால் பிறப்பால் தாழ்ந்தவன் அன்பாலும் நற்குணத்தாலும் உயர்ந்தால் ஈசன் பதவியை அடைகிறானென்றும் அவனை நாடெல்லாம் கொண்டாடுமென்றும் நாம் உணருகிறோம்.

இப்பொழுது நம்முடைய தேசத்தில் இளமையிலேயே அன்பும், ஊக்கமும், விடாமுயற்சியும், கடவுளிடத்தில் பயபக்தியும், விதியைவெல்லும் மதியும் ஜாதி த்வேஷமில்லாமல் நாட்டிலுள்ளவர்களெல்லாரும் கூடி உறவாடும் ஒற்றுமையும்மிகவும் இன்றியமையாத குணங்களானதால், தேச சாம்ராஜ்யங்களை விரும்பினவர்களும், நாகரீகத்தின் மேன்மையை நாடினவர்களும், கடவுளின் அனுக்ரஹச் செல்வத்தைக் கடைப்பிடித்தவர்களும், இத்தகைய நூல்களை ஆமோதித்து அவற்றைச் சிறுவர்களும், சிறுமிகளும் ஆனந்தமாகப் படிக்கும்படி ஏற்பாடு செய்யவேணும் என்று நான் தாழ்மையாகப் பிரார்த்திக்கிறேன்.

நாகப்பட்டணம், 9—1—1924. } கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி,
சப்-ஜட்ஜி.

உ

கடவுள் துணை.

மார்க்கண்டேயன்.

I

மிருகண்டு என்று ஒரு ரிஷி இருந்தார். அவர் மனைவி மருத்வதி என்பவள். இவர்கள் தெய்வ பக்தி நிறைந்தவர்கள். கணவனும் மனைவியும் பரஸ்பர அன்யோன்னியமாய் இல்லற தர்மத்தைச் சீராய் நடத்தி வந்தார்கள். இவர்களுக்கு எல்லாவித பாக்கியமும் நிறைந்திருந்தன. ஆனால் புத்திரனில்லாக் குறை ஒன்றுமட்டும் இவர்கள் மனதை ஸதா வாட்டிக்கொண்டு இருந்தது. வம்ச விர்த்திக்காக புத்திரன் வேண்டும். பிதிர்க்களை திருப்திசெய்வதற்காக புத்திரன் அவசியம். புத் என்னும் நரகத்திற்குப் போகாதபடி காப்பாற்றுபவன் புத்திரனே. குழந்தைகளைப் பெற்று, வளர்த்து, பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி, மழலை மொழிகேட்டு இன்புற்றிருப்பதைவிட வேறு ஆனந்தம் இவ்வுலகில் இல்லை என்பது நிச்சயம். ஆகவே நாம் ஈசுவரனைக் குறித்துத் தவம்செய்யவேண்டும். புத்திரப்பேற்றை அடையவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

மிருகண்டு மகரிஷி சிவனைக்குறித்துத் தவம் செய்தார். மருத்வதி சதா விஷ்ணுவைப் பூஜித்து

வந்தாள். இருவரும் இவர்கள் பக்திக்கு மெச்சி புத்திரன் அளிப்பதென்று தீர்மானித்தார்கள். இரு வேறு தெய்வங்கள் ஒரே தன்மையில் இருவர் மனோரதத்தையும் எவ்வாறு பூர்த்திசெய்யக்கூடும் என்று எண்ணலாம். ஈசுவரர் ஒருவரே. அவர் தன்னை வேண்டுவோர் இஷ்டப்படி பற்பல நாம ரூபங்களுடன் இருக்கிறார். அவர் இந்த ப்ரபஞ்சத்தில் செய்யும் கிருத்தியங்களுக்கு ஏற்றவண்ணம் பற்பல நாமரூபங்களுடன் விளங்குகிறார். ஹரி என்றும், சிவன் என்றும் பேதமில்லை. ஒப்பற்ற முழுமுதற் கடவுளே, இவ்வாறு விளங்குகிறார். ஆகையால் இருவர்மனோரதமும் ஒரே தன்மையில் நிறைவேறக்கூடியதுதான். அவ்வாறே நிறைவேறியது.

II

"ஹே மிருகண்டு உன் தவத்தைக்கண்டு மெச்சினேன். உனக்குப் புத்திரப்பேறளிக்க மனமுவந்தேன். பூர்ணாயுசுடன்கூடிய துஷ்ட புத்திரன்வேண்டுமா? அல்லது ஆண்டுகள் பதினாறேகொண்ட ஸத்புத்திரன் வேண்டுமா?" என்று சிவபிரான் கேட்டார். "ஹே சர்வலோக சரண்யா! குணமே மேம்பாடுடையது. ஒழுக்கமே மிக்கச் சிறந்தது. ஆகவே ஸத்புத்திரனையே அருளும். ஆண்டுகளைப்பற்றி அக்கரையில்லை" என்று மிருகண்டு வேண்டினார்.

ஸ்ரீ மஹா விஷ்ணுவும் மருத்வதி களவிற்றொன்றி அவ்வாறே கேட்க அவ்வம்மணியும் ஸத் புத்தி

ரனையே வேண்டினாள். அவரும் அவ்வாறே அனுக்ரகம்செய்து மறைந்தார். அதுமுதல் மருத்வதியும் கருத்தரித்தாள்.

மாதங்கள் பத்தும் சென்றன. மருத்வதியும் ஓர் நல்ல சுபதினத்தில் ஓர் புருஷப்ரஜையைப் பெற்றாள். குழந்தையைப் பெற்றோர்கள் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்துவந்தார்கள். எந்தெந்தக் காலங்களில் என்னென்ன சடங்குகள் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம்வேதவிதிப்படி செய்துமுடித்தார்கள். குழந்தைக்கு நாராயணன் என்று நாமகரணம் செய்தார்கள். ஆனால் மிருகண்டு மகன் ஆனதுபற்றி மார்க்கண்டேயன் என்றே அழைத்தார்கள். ஐந்தாவது வயதில் வித்யாரம்பம் செய்வித்தார்கள். மிருகண்டுவே தன் மகனுக்கு வித்யா குருவாக ஏற்பட்டார். காலத்துக்கு ஏற்றபடி விஷயங்களைக் கற்பித்துவந்தார். மார்க்கண்டேயனும் வித்தையிற் சிறந்த குணவானாக விளங்கினான். ஏழாவது வயதில் உபநயனமும் நடந்தது. வித்தியார்த்தியாய் கிரமமாக நடந்துவந்தான்.

III

நாள்தோறும் அதிகாலையில் எழுந்திருப்பான். கைகால் முகம்கழுவி கடவுளைத் தொழுவான். முதல்நாள் படித்தபாடத்தை சிந்தனை செய்வான். பல் தேய்த்து, முகம் கழுவி, விபூதி அணிந்து, நந்தவனம் சென்று பூஜைக்கு நறுமலர்கொய்துவருவான்.

சூர்யோதயத்திற்குள்ளாக ஸ்நானம்செய்து சந்தியா வந்தனம், ஜபம், சூர்ய நமஸ்காரம் முதலியன செய்து வீட்டிற்குச்சென்று சமிதாதானம் செய்துவிட்டு அமுதுண்டு, பள்ளிசென்று தன் சஹபாடிகளுடன் பாடங்கள் கற்றுவருவான். பதினொரு மணிக்குத் தன் இல்லம்வந்து மாத்யானிகம் ஜபம் முடித்துக்கொண்டு தகப்பனர்பூஜைக்குவேண்டியஒத்தாசை செய்து தீர்த்தமுட்கொண்டு தெய்வத்தைப்போற்றிப் பகற் போஜனம் உண்பான். பிறகு சற்று களைப்பாறி இரண்டொருமணிநேரம் பாடங்களைப் படித்துவிட்டு மறுபடியும் பள்ளிசென்று சிறூர்களுடன் படித்து விட்டு மாலையில் தேகத்திற்கும் மனதிற்கும் ஊக்கத்தையும், உற்ஸாகத்தையும், பலத்தையும் ஊட்டும்விளையாட்டுகள் ஆடி, அஸ்தமன சமயத்தில் சாயம் சந்தியாவந்தனம், ஜபம்,சமிதாதானம் செய்துவிட்டு தேவாலயம்சென்று சுவாமிதரிசனம் செய்துகொண்டு வருவான். இராப் போஜனம்உண்டு மறுநாள் பாடங்களைப்படிப்பான். பிறகு இரவு பத்துமணிசுமாருக்கு பகவானை ஸ்மரித்துக்கொண்டு படுக்கச்செல்வான்.

விடுமுறை நாட்களில், தோழர்களுடன் கூடி வனங்களுக்கு போவான். தர்ப்பை, ஸமித்து, பலாச இலை முதலியன சேகரித்து வருவான். தகப்பனரிடம் ஸன்மார்க்க விஷயங்களைக்கற்றும், சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டும் காலம் கழிப்பான். இவ்வாறாக இவனது நாட்கள் இனிதே கழிந்துவந்தன. இவனுக்கு ஏற்பட்ட வயதைப்பற்றி எல்லாருமே மறந்து

விட்டார்கள். பதினைந்து வருஷங்கள் தீர்ந்துவிட்டன. பதினாறாவது ஆண்டு ஆரம்பித்துவிட்டது. எல்லாரும் இவனுடைய குணத்தையும், ஆசார ஒழுக்கத்தையும் மெச்சி ஆனந்தமாயிருக்கிறார்கள். இப்படியிருக்க ஒருநாள் ஒரு குறத்தி இவர்கள் வீட்டிற்கு வந்தாள்.

IV

குறவர் என்று ஒரு ஜாதியார் உண்டு. இவர்கள் ஆண்களும், பெண்களும், ஊரூராய்த்திரிந்து பிச்சையெடுத்து வயறு வளப்பவர்கள். இவர்களுக்கு வீடு வாசல்கள் கிடையாது. மரத்தடிகளிலும், கிராம வெளிப்புறங்களிலும் வசித்துவருவார்கள். இவர்கள் சீப்பு, சிடுக்குவாரி, ஊசி முதலியவைகளை விற்றுவருவார்கள். பெண்கள் பிச்சைக்குப்போகும்போது எளிதில் பிச்சைகிடைக்கும்படி குழந்தைகளுக்கு பனையோலையால் கிலிகிலிப்பை செய்துகொண்டு போவார்கள். இவர்களிடத்தில் நமது பெண்பாலர் பச்சை குத்திக்கொள்வார்கள். இவர்களில் சிலர் கைரேகைகளைப்பார்த்துக் குறிசொல்வார்கள்.

மிருகண்டு வீட்டிற்கு ஒரு குறத்தி வந்தாள் என்று போனபாடத்தில் சொன்னோம். அவள் வந்தபோது மிருகண்டுவும் அவர்மகனும் வீட்டிலில்லை. மருத்வதிமட்டும் தனியே இருந்தாள். குறத்தி பிச்சைகேட்டுத் தனக்கு ஒரு பழந்துணி கொடுக்கும்படி

வேண்டினள். அவ்வாறே மருத்வதிகொடுத்தாள். பிறகு குறத்தி கையைக்காட்டச் சொன்னாள். மருத்வதியும் கையை நீட்டினள். குறத்தி சற்றுகுறிப்பாக ரேகைகளைப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்துக் கொண்டாள். "அம்மா குறத்தி என்னவிஷயம். என் துக்கப்படுகிறாய்" என்று மருத்வதிகேட்டாள். "ஐயோ தாயே நான் என்ன சொல்வேன். உன்னைப்போல் துரதிருஷ்டக்காரி எங்கேனும் உண்டோ. கடவுள் கூத்து வேடிக்கையாயிருக்கிறது. இந்த அம்மாளுக்கும் இப்படி கஷ்டம் வரலாமா. காற்றினால் பழுத்த பழங்கள் மட்டுமேயன்றி, சிறிய பிஞ்சுகளும் விழுந்து விடுகின்றன. இந்த உலகம் மாயை. ஒன்றும் ஸ்திரமன்று. ஆனாலும் இப்போது இந்தக்கஷ்டம் வேண்டாம். ஆனால் நாம் என்ன செய்யக்கூடும்" என்று சொல்லிக்கொண்டேபோக ஆரம்பித்தாள். விஷயம் என்னவென்று மருத்வதியும் கட்டாயப்படுத்திக்கேட்க "தாயே உனது ஒரேபுத்திரனை இன்னம் ஒரே வருஷத்தில் இழக்கநேரும் என்னசெய்யலாம்" என்று சொல்லிக்கொண்டு போய்விட்டாள்.

V

"ஐயோ தெய்வமே என்னசெய்வேன். எவ்வாறு சகிப்பேன். இப்போதுதானே ஞாபகம் வருகிறது. பதினாறுவயது மகன்தானே வேண்டுமென்று வரம் பெற்றோம். பதினாறுவது வயதல்லவோ நடக்கின்றது. என்மகனே உன்னைப் பிரியும்காலம் வந்து

விட்டதே. ஈசனும் இவ்வாறு எங்கள் தலையில் எழுதிவிட்டாரோ. குறத்திசொல்லிய பிறகுதானே விஷயம் விளங்கிற்று. இதற்குத்தானே இவ்வளவு புத்திசாலியாய் வளர்ந்துவந்தான். எல்லாராலும் கொண்டாடப்பட்டுவந்தான். இவனுடையஒழுக்கமென்ன, கல்வி என்ன, எதைக்கொண்டாடுவது, எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினனே. கண்ணில்லான் கண்பெற்று உடனே இழந்தவாறாயிற்றே எங்கள் பிழைப்பு. என்ன செய்வோம் ஜகதீசா, சங்கரா" என்று புரண்டுபுரண்டு அழுதாள். தலை தலையாய்ப்போட்டுக்கொண்டாள். சோர்ந்து கீழேவிழுந்தாள். அந்த சமயம் மிருகண்டுமுனிவர் அங்குவந்தார். மனைவி இருக்கும் அலங்கோலத்தைக்கண்டார். குளிர்ந்த ஜலம் முகத்திற்றெளித்து, சற்று விசிறி மூர்ச்சைதெளியச்செய்து என்ன சங்கதி, என் இவ்வாறு பிரக்ஞைதப்பிவிழுந்திருக்கிறாய் என்று கேட்டார். மருத்வதியும் ஒருவாறு சோகத்துடன் குறத்தி சொன்னவற்றைச் சொல்லி சிவபிரான் வரதலைதப்பற்றியும் சொன்னாள். "ஐயோ மகனே,புத்ரசோகம் பொல்லாதே, உன்னைப் பிரிந்து எவ்வாறு உயிர்வாழ்வோம். இவ்வளவுதானா நாங்கள் கொடுத்துவைத்தது. ஈசன் சோதனை வெகு நன்றாக இருக்கிறது" என்று விசாரப்பட்டுக்கொண்டே தன் மனைவியைப்பார்த்து என் இல்லறத்துணைவி, நாம் எவ்வளவு கொடுத்துவைத்தோமோ அவ்வளவுதானே அநுபவிக்கலாம். முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டால் கிட்டுமா? ஆனால் நம்மனத்தை வருத்தும் இந்தவிஷயத்தைக் குழந்தையறியலாகாது.

அவனை துக்கப்பட விடலாகாது" என்று சொல்லிக்
கொண்டு இருவரும் சுமுகமாகவே இருப்பதுபோல
நடித்துவந்தார்கள். நாளடைவில் முகக்குறிப்பால்
தன் பெற்றோர்கள் வேதனையுற்றிருக்கிறார்களென்
றும் நாளுக்குநாள் மேனிமெலிவுறுவதையும் கண்ட
மகன் மார்க்கண்டன் "என் விசாரப்படுகிறீர்கள்; அன்
னபானாதிகள் சரியாய் உட்கொள்கிறதில்லை. ஏதோ
அபாரமான விஷயம் ஒன்று உங்கள் மனத்தை வருத்
துகிறதுபோலும். கருணைபுரிந்து என்னிடம் சொல்
லுங்கள்" எனவேண்டினான். அவர்கள் முதலில் சொ
ல்லவில்லை. ஆனால் அவன் அதிகமாய் நிர்பந்தப்படுத்
தவே, மிருகண்டு ஒருவாறு மனத்தைத்தேற்றிக்கொ
ண்டு சொல்ல ஆரம்பித்தார்.

VI

"என் அருமைக்கண்மணியே, இவ்வுலகில் நம்
மிஷ்டப்படியே காரியங்கள் நடப்பதில்லை. நாம் ஒன்
று நினைக்க தெய்வம் ஒன்று நடத்திவிடும். முற்றி
லும் சந்தோஷம் என்பதே இவ்வுலகில் கிடையாது.
துக்கமும் சுகமும் கலந்தேவருகின்றன. அவரவர்
கள் விதியையனுசரித்து துக்கமோ, சுகமோ மேலிட்
டிருக்கின்றது. நாம் எவ்வளவோ சீரும் சிறப்புமாயி
ருக்கிறோமென்று இறுமாந்து சந்தோஷமாயிருக்கும்
சமயம் திடீரென்று ஆற்றொணாதுக்கம் ஏதாவது ஏற்
பட்டுவிடுகின்றது. என் செல்வக்குழந்தாய் நெடுநாள்
புத்திரனில்லாமலே வருந்தினோம். பிள்ளைவேண்டி பர

மனை வேண்டினோம். "ஆண்டுகள் பலகொண்ட அஸத்தானபுத்திரன் வேண்டுமா? அற்பாயுள்கொண்ட சற்புத்திரன் வேண்டுமா" எனக்கேட்டார். நாங்கள் நல்ல மகனையே வேண்டினோம். ஆண்டுகள் பதினாறே கொண்ட ஆண் மகனுதிப்பானென்று வரமருளினார். அதன்பலனாக நீ தோன்றினாய். பதினைந்து பிராயமும் பூர்த்தியாய்விட்டது. உள்ளது ஒரே ஆண்டுதான். என்னசெய்வோம். எவ்வாறு உன்னைப்பிரிவோம். முன் ஜன்மத்தில் செய்தபாவமோ, ஈசன் பூஜையில் தவறுகள் செய்தோமோ. யார் யார் புத்திரர்களுடன் வாழ்வதைக்கண்டு பொறாமைகொண்டோமோ. எங்கள்விதி உன்னைப்பிரிய நேர்ந்தது. இவ்விஷயம்தான் எங்கள் மனத்தை சதாவருத்துகின்றது. நீ இவ்வளவு சீக்கிரம் இறக்கவும் அயன் விதித்துவிட்டானே. எங்கள் தலைவிதி உன்னை இழக்க நேர்ந்ததே என்னசெய்யலாம், விதிவலிதே அதைமாற்றல் முடியாதே. ஆகையாற்றான் ஆற்றொணாத்துயரம்கொண்டோம்" என்று சொல்லி ஒவென்று கதறி அழ ஆரம்பித்துவிட்டார். "தந்தையே இதற்காகவா விசாரப்படுகிறீர். விடும் விடும். இந்த விசாரத்தை விட்டொழியும். நான் ஏன் இறக்கவேண்டும் ஈசன் என்னைக் காப்பாற்றுவார். நான் சொல்வதை தயவுடன்கேளும் ஐயனே நான் ஏதாவது அத்து மீறிச் சொல்வதாக கோபிக்கவேண்டாம். எல்லாம் தாங்கள் அறிந்ததே. அளவுகடந்த துக்கத்தால் இப்போது மறந்திருக்கிறீர்கள். அந்த விஷயத்தை நான் ஞாப... ...க்குகிறேன்

VII

"என்னை ஈன்ற அத்தனே, எவ்வளவோ ஜன்மங்கள் எடுத்தோம். இன்னம் எவ்வளவோ ஜன்மங்கள் எடுக்கவேண்டும். ஒவ்வொரு ஜன்மமும் அதற்கு முன் ஜன்மத்தில் நாம் செய்திருக்கும் நல்வினை தீவினைகளுக்குத் தக்கபடி ஏற்படுகின்றது. எடுக்கும் ஜன்மங்களிலெல்லாம் அதற்கு முன்செய்த புண்ணியபாவங்களுக்குத் தக்கவாறு சுகமோ, கஷ்டமோ நாம் அனுபவித்தே தீரவேண்டும். இதைத்தான் விதி என்று எல்லாரும் சொல்வது. இதைமாற்றுவது முடியாது என்று பலதடவைகளிலும் சொல்லியிருக்கிறீர்கள். உங்களுடைய பூர்வ ஜன்மத்தின் கர்மத்திற்குத்தக்கபடி இந்த ஜன்மத்தில் புத்திரன் இல்லாமல் அவதிப்பட்டீர்கள். அது உங்கள் விதி என்று நம்பியிருந்தீர்கள். ஆனால் அப்படியே விதியின்போக்கிலேயே காரியங்களை விட்டுவிட்டீர்களா. இல்லை, இல்லை, பகவான் அருள் உண்டானால் விதியை வெல்லலாம் என்றநம்பிக்கை பிறந்தது. ஆகையால்ஈசுவரனை வேண்டினீர்கள். அவர் அருளால் விதிக்குமாறாக நான் பிறந்தேன். இது நாம் அறிந்தவிஷயம்தானே. இப்போது நீங்கள் என்னை இழக்கவேண்டியது உங்கள் விதியென்றும், நான் இறக்கவேண்டியது, என் விதி என்றும் அவ்விதியை நாம் அனுபவித்தேதீரவேண்டுமென்றும் சொல்கிறீர். நான் ஏன் இறக்கவேண்டும்? நீங்கள் ஏன் என்னை இழக்கவேண்டும்? நமக்கு இஷ்டமில்லாதகாரியம் ஒன்று ஏன் ஏற்படவேண்டும்? விதியின் போக்கை அனுசரித்து நாம் ஒரு ...

னமும் செய்யாமல் சும்மாவிருந்தால் அப்படித்தான் ஏற்படும். விதியை வெல்லலாம் என்பதை நாம் பிரத்தியட்சத்தில் அனுபவித்திருந்தும் அந்தவிதிக்கு நாம் ஏன் பயப்படவேண்டும். முன்னால் விதியின்போக்கை மாற்றிஎன்னைத்தந்திட்ட ஈசனுக்குஇப்போது அவ்வித வலிமையற்றுப்போய்விட்டதா? ஏதேது தந்தாய் மனக்குறையை ஒழியும். இஷ்டதெய்வத்தின் அருளால் நமது இஷ்டம் கட்டாயம் நிறைவேறும். மதியிலிகளன்றோ விதிவலிதென்று ஏமாந்து அவதிப்படுபவர்கள். இவ்விஷயத்தை இச்சமயம் ஞாபக மூட்டியதற்காக என்னை மன்னித்தருளும் தந்தையே" என்றான் மார்க்கண்டன்.

VIII

"என் பிதாவே, ஆபத்ஸகாயன்என்றும், ஆபத்பாந்தவன்என்றும், ஆபத்ரட்சகன்என்றும், பக்தவத்ஸலனென்றும், பக்தபராதீனனென்றும், கருணாமூர்த்தியென்றும், என் பகவானை ஸ்தோத்திரம் செய்கிறோம். அந்தவித குணங்கள் அவரிடம் இல்லையா? அந்தவிதம் ஆதரிக்கும் சக்தி அவருக்கு இல்லையா? விதிதான் வலிதுஎன்றால் கடவுளை ஏன்போற்றவேண்டும்? எல்லாவற்றையும் மீறிய மூர்த்தியன்றோ அவர். உண்மையானபக்திவேண்டும். திரிகரண சுத்தியாய் அவரைப்போற்றவேண்டும். அவரே கதி என்று இருந்துவிடவேண்டும். எல்லாவற்றையும் வென்றுவிடலாம். எல்லாப்பெருமையையும் அடையலாம். நான் ஏன் இறக்கவேண்டும், இறப்பது என்றால் என்ன? பழைய

கந்தை வஸ்திரத்தை மாற்றி புதிய வஸ்திரம் தரிப்பது போலத்தானே. கூடுவிட்டுக் கூடுபாய்வதுபோலத் தானே? இந்ததேகத்தைவிட்டு வேறு தேகத்தை அடையவேண்டியதுதானே. ஆத்மாவோ நித்தியமானது, அழிவற்றது. பரமாத்மாவோடு சம்மந்தப்பட்ட திவ்யமான அம்சம். அதுதான் சௌகரியப்படி பற்பல தேகங்களை இருப்பிடமாகச் செய்துகொள்கிறது. எனக்கு இந்த ஜன்மமே சௌகரியமாயிருக்க நான் என் இதைப்போக்கிக்கொள்ளவேண்டும். பெற்றோர்களாகிய உங்களை சந்தோஷப்படுத்துவதுதானே புத்திரனாகிய என்னுடையகடமை நான் அப்படியே செய்வேன். ஈசனை மனதாறப்போற்றுவேன். விதியை வெல்வேன். இது நிச்சயம். ஆகையால் இன்று முதல் நீங்களும் எனக்காக பகவானைப்போற்றுங்கள். நானும் இந்த க்ஷணம்முதல் இதேவேலையாக இறைவனைப் போற்றுகிறேன்" என்றான். இந்தவார்த்தைகளால் மிருகண்டுவிற்கும் மருத்வதிக்கும் ஓர் நம்பிக்கை உண்டாயிற்று. உற்சாகம் எற்பட்டது. அதுமுதல் அவ்வாறே பகவானைப்போற்றி பூஜைகள் செய்துவந்தனர்.

IX

அங்கிங்கெனாதபடி எங்கும் நின்றாய், அருளொடு நிறைந்தாய், அகிலாண்டகோடியுமீன்றாய், அன்பர் மனத்துறைவாய், அமரரிடர் தீர்த்தாய், அம்புலிச் செஞ்சடையாய், ஆக்கல், அளித்தல், அழித்தலாதி முத்தொழில் கொண்டாய், ஆலத்தையுண்டாய்,

ஆறணிவேணியா, என் ஆபத்தைத் தீர்ப்பாய்; மலைமே லுறையும் மெய்யா, மலையத்துவஜன் மருகா, மண்டலத்தோர் போற்றும் துய்யா, மங்கை பங்காளா, மாமறைமுதல்வா, மான் மழுவேந்திய கையா, மாறனை வென்ற சூரா, மேனி நீறணிந்தவய்யா, என் மனக்குறை தீர்ப்பாய். பாகதியளிப்பவா, பாம்பணி மார்பா பார்வதி மனோகரா, பாருளோர் போற்றும் பசுபதி, பிள்ளைக் கறியுண்டவா, பிறவித் துன்பம் தீர்ப்பவா, புலித் தோல் போர்த்தவா, பெருந்துறைப் பெருமானே, பேராருளாளா, போக்குவாய் என் எமபயம். சம்போ சிவசங்கரா, சச்சிதானந்த ரூபா, சிதம்பரநாதா, சிற்சபேசா, சுந்தர ரூபனே, சுவயம்பிரகாசனே, செந்தணல் கொண்டோய், செப்பரிய பரமனே, சொற்றுணை வேதியா, சொலற்கரிய ஒப்பிலா மணியே, சவியாதுன்னைச் சாற்றினேன், என்னை ஆட்கொள்ளாய். என் பெற்றோர் இன்புற, உன் கருணை ஓங்கித்தழைக்க உலகெலாம் உன்னைக்கொண்டாட என்னை ஈடேற்றுவாய். ஐயனே, மிருத்யு பயம் ஏற்படாவண்ணம் ஆட்கொண்டு என்னைக் காப்பாற்றுவாய். அபயம். அபயம், அபயமென்றே ஓலமிட்டு உன்னையடைந்தேன். நாதா அருள்புரிவாய் என்று இவ்வாறு போற்றி சதா நறுமலர் கொண்டு சிவபிரானை பூஜித்து வந்தான். இவனுடைய தேகம் அனைத்தும் ஒருவித திவ்ய ஒளிபெற்று பிரகாசத்துடன் பொலிவுற்று விளங்கியது. ஆண்டுகள் பதினாறும் நீர்ந்தன.

X

காலகதியை அனுசரித்து ஆன்மாக்களின் ஆவியைப்போக்கும்தொழிலில் அமர்ந்திருக்கிறவன் எமன் அவரவர்கள் பாவ புண்யங்களுக்கேற்ப எந்தெந்தப் பதங்கள் அளிக்கவேண்டுமோ அவற்றையளிப்பவன். ஒரு ஆன்மாவுக்கு ஏற்பட்ட ஜீவியகாலம் இம்மியள வேனும் ஏறவோ, தாழவோ விடான். ஆவி கவர்ந்து போக அவன் வரும்சமயம் போற்றினும் போகான். பொருளொடும் போகான், செல்வத்தைக் கருதான். சீரைக் கருதான். சிறியாரென்று பாரான். பெரியாரென்று பாரான். எந்தநேரமோ, எந்தஇடமோ, என்ன காரியமோ, ஒன்றும் பாரான். எங்கிருப்பினும், எவ்வாறிருப்பினும், என்நேரமாயிருப்பினும், காலன் வந்திட கவர்ந்துபோவான் உயிரை. இவனே நேரில் செல்வதுமுண்டு. இவனுடைய ஆட்களை அனுப்புவதுமுண்டு. இவன் ஆட்களுக்கு எமதூதர்கள், எம படர்கள், எம கிங்கரர்கள் என்று சொல்வார்கள். விசேஷ தர்மம் செய்தவர்கள், தவசிரேஷ்டர்கள் பக்தர்கள் ஆகிய இன்னவர்பால் இவனேசென்று மரியாதையாக அனாயாசமாக ஆவிபற்றி வருவான்.

மார்க்கண்டன் வயது பதினாறும் சென்றதை கண்டு அவனுடைய சிறந்த பக்தியாலும், சிவ பூஜா விசேஷத்தாலும் தன் ஆட்களால் அவனை அழைத்து வருவது முடியாதெனத்தெரிந்து,மகிஷ வாஹனமேறி மார்க்கண்டேயன் பூஜை செய்யுமிடம் தானே நேரிற்

சென்று, பூஜையைக் கண்டு பிரமித்து நடுநடுங்கி, என்னசெய்வதென்று யோஜித்து, “ஹேமார்க்கண்டா ஹே தவசிரேஷ்டா, ஹே சிவபூஜாதுரந்தரா, உனக்கு ஏற்பட்ட நாட்கள் கழிந்தன. உன் ஆயுள் இறுதி இதுவே. பூஜையை நிறுத்து. உடனே புறப்படு” என்று வினயமாய்ச் சொன்னான். மார்க்கண்டன் இதைச்சற்றும் சட்டைசெய்யாது தன் பூஜையிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தான்.

XI

பார்த்தான் எமன். தன்னாலானமட்டும் நல்லதனமாகச் சொல்லிப்பார்த்தான். மார்க்கண்டேயன் லட்சியம் செய்வதாகக்காணோம். நேரமோ ஆகிவிட்டது. சீக்கிரமே ஆவிகொண்டுசெல்லவேண்டும். தாமதிக்கமுடியாது. வீசினான் பாசக்கயிற்றை. “யாரது என்தவத்திற்கும் பூஜைக்கும் பங்கம்விளைவிப்பது என்னுடன் வாதாடக்காரணம் என்ன! ஹே தர்மராஜனே, கடையூர் நாதன் கட்டளையின்றி நான் இவ்விடம்விட்டு அசையேன். வீணில் ஏன் என் பூஜையைக்கெடுக்கிறாய். கடையூரானைக் கடைப்பிடித்தேன். அவரை விட்டு எட்டி அடிவையேன்” என்று சொல்லி, லிங்கத்தை ஆலிங்கனம் செய்துகொண்டான். [illegible] பாசம் லிங்கத்தையும் சேர்த்[illegible]. அச்சமயம் மார்க்கண்டேயன் “ஹே நீலகண்டா, உமாபதி, ஹே ருத்ரமூர்த்தி, உன்னை சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கிறேன். என் யமபயம் போக்குவாய். ஹேஹேதேவி

தேவா மஹாதேவா, ரிஷபத்வஜா, ஹே தேவேசா, உன்னைப்போற்றினேன், என் எமபயம் போக்குவாய். ஹே கங்காதரா, சசிதரா, சங்கரா, சூலபாணி உன்னையே சரணம் அடைந்தேன். என் எமபயம் போக்குவாய். ஹே பஸ்மோதூளித விக்ரகா, நாகாபரணபூஷிதா, வயாக்ரசர்மாம் பாதரா, பார்வதி ப்ராணவல்லபா, நீயே கதி என்று அடைந்தேன். என் எமபயம் போக்குவாய். ஹே ஆனந்தமூர்த்தி, நித்யமங்களமூர்த்தி, திவ்ய சுந்திரமூர்த்தி, எமனும் பாசக்கயிறு வீசிவிட்டான். தங்கள் ஸன்னிதானம் என்று கூடப் பார்க்கவில்லை. தங்களேயும்சுற்றி வீசிவிட்டான் சற்றேனும் தங்களை மதிக்கவுமில்லை, ஐயனே என்னப்பனே, என்னிடர் அகற்றிடுவாய். என் பெற்றோரை இன்புறச் செய்வாய். என் மனோரதம் ஈடேற்றுவாய் என்று இவ்விதமாகத்தானே திவ்யசுந்தர லிங்கத்தை அணைத்துக்கொண்டு போற்றினன்.

XII

ஈசனும் பார்த்தார். மார்க்கண்டேயன் பூஜையை மெச்சினர். லிங்கத்தைப் பிளந்துகொண்டு வெளிக்கிளம்பினர். அதிக கோபாவேசத்துடன் எமனை எட்டிஉதைத்தார். "அடே கால உனக்கு இவ்வளவு தைரியமா? இவ்வடாதகாரியம் கூசாமற் செய்யத்துணிந்தாயா? அடே பதரே! அவன் பதினறேவயது கொண்டவன் என்றல்லவோ அவன் பெற்றோர்களிடம் சொன்னேன். பிறகு அவன் மரணமடைவான் என்று சொன்னேனு? ஏன் இப்படி முன்பின் யோசி

யாமல் செய்தாய்? அவனை ஒன்றும் செய்யாதே; போ” என்று அதட்டிச்சொன்னார். எமனும் சிவபிரானை வேண்டி வணங்கித் தன்னுலகம் சென்றான்.

மார்க்கண்டனும் சிவன் அருள்பெற்று, அனுமதிபெற்று, அவரைப்பன்முறையும் வணங்கித் தன் பெற்றோர்களிடம் சென்றான். மிருகண்டுவும் மருத்வதியும் மைந்தனைக்கண்டு மகிழ்ந்து, மகேசுவரன் பெருமையைப் புகழ்ந்துபோற்றினார்கள். ஈஸ்வரனிடத்திற்கொண்ட நிஜபக்தியினால் எமனையும்வென்று என்று மழியாப் புகழ்கொண்டு என்றும் பதினாறே பிராயத்தனாய், தவவொழுக்கத்திற் சிறந்து வாழ்ந்து வந்தான் மார்க்கண்டன்.

சுபம்.

உ

கடவுள் துணை.

நந்தன்.

I

ஒரு தந்தை பலபுத்திரர்களைப் பெற்றிருக்கிறான். அவர்கள் எல்லாரும் ஒரே ஸ்திதியிலிருக்கிறதில்லை. அவரவர்கள் வித்தை, குணம், தொழில், சாமர்த்தியம் முதலியவற்றிற்கு ஏற்றவாறு உயர்ந்த பதவியிலோ, தாழ்ந்தபதவியிலோ இருக்கிறார்கள். ஆனால் பெற்றதகப்பன் எல்லாரையும் சமமாக பாவிக்கிறான். எல்லாரிடத்திலும் ஒரேவிதமான ப்ரீதியைக்காட்டுகிறான். சற்று இளைத்திருப்பவனை உயர்த்த முயல்கிறான். அதுபோலவேதான் இந்த ப்ரபஞ்சத்திலும்.

சமஸ்த ஜீவராசிகளையும் படைத்துக் காத்துவரும் ஈசுவரன், ஆத்மகோடிகளுக்கெல்லாம் பிதா. ஜீவராசிகள் எல்லாம் அவருடைய புத்திரர்கள். ஆகவே யாரையுமே அவர் எற்றவித்யாசமில்லாமல் காப்பாற்றுபவர். நாம் யாருமே எவ்வித உயர்வு தாழ்வுமின்றி அவருடைய பொருளைப்பெறலாம். அவர் நம்முடைய பரமபிதாவென்றும், நம்மை ரட்சிப்பவரென்றும், நமக்கு ஹிதத்தையே செய்பவரென்றும், நமக்கு எற்றத்தை உண்டாக்குபவரென்றும் உறுதியாய் நம்பி அவரைப்போற்றவேண்டும். அவரிடத்தில் உண்மையாய்

அந்தரங்கசுத்தியோடு பக்திசெலுத்தவேண்டும். அவர் இஷ்டப்படி நற்கருமங்களைச் செய்துவரவேண்டும். அவர் வேண்டாம்என்று விலக்கி இருப்பவற்றை நாமும் ஒழிக்கவேண்டும். அவர் நம்மிடத்தில் ஏகரீதியான விசுவாசத்தைக் காட்டுவார். உயர்ந்தவர்கள், தெரிந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு கொஞ்சம் தவறுசெய்தாலும்கூட அவர் அதிகமாய்த்தண்டிப்பார் தாழ்ந்தவரென்றும் தெரியாதவரென்றும் இருப்பவர்கள் தெரிந்தோ தெரியாமலோ அவரைக் கொஞ்சமாவது நம்பிவிடுவார்களாயின் அவர்களுக்கு ஏற்றத்தையே உண்டாக்குவார்.

II

இவ்வுலகத்தில், அதிலும் விசேஷமாய் இப்பாதகண்டத்தில் ஜனங்களுடைய ஆசாரவியவகாரங்கள்பற்றியும் பழக்கவழக்கங்கள்பற்றியும், தொழில் பற்றியும், சுத்தாசுத்தம் பற்றியும், பற்பல பிரிவினராக ஜனங்கள் பிரிந்திருக்கிறார்கள். அவ்வித பிரிவினரில் பஞ்சமர் என்றும் தீண்டத்தகாதாரென்றும் ஒரு வகுப்பினர் உண்டு. விசேஷமாய் இவர்கள் தொழில் பிணத்தைக்காத்தல், இறந்தபிராணிகளை எடுத்துச்செல்லல், அவற்றை அறுத்தல், அவற்றின் மாமிசங்களையுண்ணல், தோல்களைப் பதனிடுதல் ஆகியஇத்தன்மையை அசங்கியமும் அசுத்தமுமான தொழில்களைச் செய்வதுதான் இவர்களுடையவேலை. இவர்கள் ஊருக்கு வெளியே ஜனநடமாட்டமில்லாத இடங்களில் குடிசைகள் கட்டிக்கொண்டு குடியிருப்பார்கள். இது பொது

ஜனசுகாதார முறைகளை உத்தேசித்துத் தொன்றுதொட்டு நமது நாட்டில் நடந்துவரும் வழக்கமாகும். அவ்வாறு தொழில்பற்றி அவர்கள் தனித்து வசித்துவந்தபோதிலும், ஜனஸமூகவாழ்வில் அவர்களுடையக்ஷேமலாபங்கள் நன்கு கவனிக்கப்பட்டேவந்தன. ஊர்க்காவல், தோட்டம் துறவுகளில் நாற்று நடவு முதலியன செய்தல், கழனிகளுக்கு நீர்பாச்சல், பறையறைதல் முதலியன இவர்களுக்கு ஜனங்களால் எற்படுத்தப்பெற்ற விசேஷவேலைகளாகும். இவர்களும் தங்களுக்கு எற்பட்ட தொழில்களை கிரமமாயும் சுறுசுறுப்பாயும், நம்பிக்கையுடனும் பார்த்துவந்தார்கள். இவர்கள் சிரமத்திற்கு எற்ற ஊதியமும் பெற்றுவந்தார்கள். ஜனசமுதாயத்தில் இவர்களுடைய குறைகளும் விசேஷமாய் கவனிக்கப்பட்டுவந்தன. இவர்கள் பற்பல துர்தேவதைகளையே கொண்டாடிவந்தார்கள். நிஜபக்தி கிடையாது. ஈசுவரன் ஒருவன்தானென்றும் அவனே போற்றத்தக்கவனென்றும் அறிவுகிடையாது. தங்கள் தெய்வங்களை திருப்தி செய்வதாக ஜீவஹிம்சைசெய்து வந்தார்கள். ஆடு, மாடு, கோழிகளை பலியிடுதல், கள், சாராயம் முதலியவற்றை சமர்ப்பித்தல் முதலியன இவர்களுடைய வழக்கங்களாம். அந்தோ இந்தக் கொடிய வழக்கம் இவர்களுக்கு மேலென மதிக்கப்பட்டு வரும் ஜாதியாரிடத்தில் இன்னம் இருந்து வருகின்றதென்றால் இவர்களிடத்திலிருந்து வந்தது சகஜம் தானே. இவ்வித பஞ்சமர்களில் பல உட்பிரிவுகள் உண்டு. அவற்றில் பறையர் என்று ஒரு பிரிவினர். அவ்வித பறையர் ஜாதியில் ஆதனூர் என்கிற ஊரில்

ஓர் அந்தணனுக்கு அடிமையாக நந்தன் என்று ஒருவன் இருந்தான்.

III

பூர்வஜன்ம புண்ணியவிசேஷத்தால் பிறவிதுடங்கியே நந்தன் சிவபக்தியிற் சிறந்து விளங்கினான். தன் குலத்தவர் போற்றும் துர்தேவதைகளை வெறுத்துவந்தான். அவர்கள் மூடபக்தியைக் கண்டித்துவந்தான். குடியால் உண்டாகும் கேட்டை போதித்துவந்தான். சேற்றில் செங்கழுநீர் பூத்ததுபோல் பறையர்கள் மத்தியில் இவன் சிறந்து விளங்கினான். ஆனால் இவன் இனத்தவர் இவனை வெறுத்துவந்தார்கள். குலத்திற்கு எற்காத வழக்கங்கள் கூடாது. தொன்றுதொட்டு அனுசரித்து வந்த சம்பிரதாயங்களைவிட்டுவிடக்கூடாது, என்று நந்தனுக்குச் சொன்னார்கள். பாவம் என்றுதெரிந்ததைச் செய்யலாமா? தப்பிதமென்று தெரிந்த பிறகாவது விட்டுவிடவேண்டாமா? உண்மை இன்னது என்று அறியமுயலவேண்டாமா? பழையகுருட்டு சம்பிரதாயங்களையே அனுசரித்துவந்தால் கடைத்தேறுவது எப்படி? ஈசன் அருள்பெறுவது எக்காலம். எடுக்கும் ஜன்மங்களாவது எற்றமுள்ளவைகளாக இருக்கவேண்டாமா? நம்மினத்தவர் தவிர மற்றவர்கள் எல்லாரும் கொண்டாடும் ஈசன்தானே எல்லாரையும் உண்டாக்கினவர். நாமும் அவனருளுக்குப்பாத்திரமானவர்கள்தான். அவர் நம்மை விலக்கமாட்டார், வெறுக்கமாட்டார், கட்டாயம் ஆத

ரிப்பார். அருள்புரிவார். ஆகவே அவரையே போற்றுவோம். அவரையே எற்றுவோம். கோயில்களுக்குச்செல்வோம். எட்ட நின்றாயினும் கும்பிடுவோம். சிவ நாமாவளிகளைச்சொல்வோம். சிவதரிசனம் செய்வோம். சிவபக்தர்களைக் கொண்டாடுவோம். கோயிற்பூஜாகாலத்திலுபயோகப்படும் தோற் கருவி,நரம்புக் கருவிகளுக்கு வேண்டியவற்றைத் தயார்செய்து கொடுப்போம். பூஜார்கமான கோரோசனை முதலியவற்றைக்கொடுத்து வருவோம். நித்த நித்தம் நீராடித்திருநீறணிந்து சம்போசிவசங்காவென்றே சொல்வோம்,என்றிந்தப்படியெல்லாம் தன்னினத்தார்க்கெல்லாம் உபதேசித்துவந்தான். அவர்களிற் சிலர் இவன் வார்த்தையை நம்பி சிவபக்தர்களானார்கள். பெரும்பான்மையோர் இவனுக்கு புத்தி ஸ்திரமில்லை, பைத்தியம் பிடித்துவிட்டதென்று தங்கள் தெய்வங்களுக்குப் பூஜை நள் போட்டார்கள். நந்தனோ இவற்றை சட்டைசெய்யாது தன் காரியத்தையே கவனித்து மெய்யான தெய்வத்தையே போற்றிவந்தான்.

IV

நந்தனும் "ஐயோ மட உலகமே,இவ்வாறுஇருக்கவேண்டும் ஜனங்கள் புத்தி. குடிகெடுக்கும் பாழும் குடியை விரும்புவாரா நாதன். தன்னாலாக்கப்பட்ட ஓர் ஜீவனைச்சற்றும் கருணையின்றி வதைத்திடச்சம்மதிப்பாரா கருணாநிதி. பச்சிலைகொண்டு பக்தியுடன் பரமனைப்போற்றாது பாமரர்களாகத்திரிகிறார்களே

பாவிப்பறையர்கள். சொன்னாலும் கேட்பதாகஇல்லை. நான் பித்தனும் என்னைச் சிராக்கபூஜைகள் போட்டார்களாம். என்றால் சேரியில் அனர்த்தங்கள் விளைகின்றனவாம். வீணில் நாட்களை அவலமாக்குகிறார்களே? ஜன்மத்தைப் பாழாக்கிக் கொள்கிறார்களே, இவர்களுக்கு விமோசனமில்லையா? இவர்களுக்கு நல்லகாலம் பிறக்காதா" வென்று மிகவும் தன் இனத்தாருக்காகப் பரிதாபப்பட்டுக்கொண்டும், பகவானைப் போற்றிக் கொண்டும் கழனிவேலைகளை கவனித்துக்கொண்டும் விரதாதிகளை அனுசரித்துக்கொண்டும் காலம் கழித்து வந்தான். நாளாக ஆக இவன் பக்திமேன்மேலும் விர்த்தியடைந்துவந்தது. தினந்தோறும் குளித்துத் திருநீறணிந்து ருத்ராட்சமாலைபூண்டுசிவனை வேண்டிப் பிறகு தன் பண்ணைக்காரியங்களை கவனித்துவருவான். சிற்சில சமயங்களில் பித்தன்போல் ஆடுவான். அங்குமிங்கும் ஓடுவான். சிவநாமாவளிகளைப்பாடுவான். உன்மத்தன்போல் உட்கார்ந்திருப்பான். சிவாலயங்கள் செல்லவேண்டும் சிவபிரானை தரிசிக்கவேண்டும். ஜன்மஸாபல்யம் அடையவேண்டும் என்கிற எண்ணமே காலக்கிரமத்தில் மேலிட்டு நின்றது. புண்ய ஸ்தலங்கள் செல்லவேண்டும். திருநாட்களைக் கொண்டாடவேண்டும். உற்சவாதிகளைக் கண்டுகளிக்கவேண்டும். அய்யனுடைய அடிமையாயிற்றே அவர் உத்தரவு பெறவேண்டுமே, அனுமதி கொடுப்பாரோ, மாட்டாரோ என்று சஞ்சலப்பட்டுக்கொண்டே நாட்களைக் கழித்துவந்தான். பக்கத்திலுள்ள சிவாலயங்கள்தோறும் ஓழிந்தவேளைகளில்சென்று, எட்டநின்று சுவாமி

தரிசனம் செய்துவருவான். ஒருநாள் திருப்பன்கூர் என்கிற சிவஸ்தலம்சென்று கோயில் வெளிப்புறம் சுற்றி வலம்வந்து சுவாமி தரிசனத்திற்காக கோபுரத் திற்கு வெளியே நின்றான்.

V

"வேதமந்தரங்கள் ஒலிக்கின்றன. தேவாரத் திருப்பதிகங்கள் இன்பமாய்க் கேட்கின்றன. ஹர, ஹரவென்கிற சப்தம் ஆனந்தத்தை விளைக்கின்றது. மணியோசை கணீர் கணீர் என்று உண்டாகின்றது. ஆண்டவன்பூஜை வெகு விமரிசையாக நடக்கிறது. ஆனந்தமூர்த்தியின் திவ்யதரிசனம்கிடைக்கவில்லையே, மலைபோல் எருது ஒன்று குறுக்கேபடுத்திருக்கிறது. ஐயன் உருவத்தை மறைக்கிறது. புலவர்போற்றும் பெருமானைப் புலையன் காணக்கூடாதோ? மண்டலத் தோர் கொண்டாடும் பெருமானைச் சண்டாளன் கும் பிடக்கூடாதோ? இறைவனை எத்தும் பெருமை பறை யன் பெறக்கூடாதோ?ஆதியந்தமில்லாத நாதனுக்கும் ஜாதிபேதமுண்டோ?" என்று வருந்தும் வேளை, "சற் றே விலகியிரும் பிள்ளாய் நந்தி. சன்னிதானம் மறை க்கிறதென்கிறான் நந்தன், சற்றே விலகியிரும், கண்டு களிக்கட்டும் என் பக்தன்" என்று பகவான் உத்தரவி டவே நந்தியும் ஒரு புறமாகச்சற்றுவிலக, நந்தனும் சுந்தரமூர்த்தியின் திவ்ய தரிசனம் கிடைக்கப்பெற்று, "பொன்னார் மேனியனே, சம்போ சிவ சங்கரனே, புலித் தோலை யரைக்கிசைத்தோனே, பாரொடு

விண்ணைப்பரந்த என்பரனே, சம்போகங்காதரனே, சிவபுரத்தரசே எம்பெருமானே, சுரர்கள்போற்றும் சுந்தரனே, செழுமதியணிந்தாய், செம்பொற்ஜோதி, அரக்கர்புரமெரித்தோனே, தேவர்தம்தேவே, முத்தனே, முதல்வா, முக்கண்ணா, பக்தியாய்ப் பணிமலர்பறித்துப்பரவுவார் தமக்குப் பரகதிகொடுத்து உதவும் சித்தனே, செல்வனே, ஒப்பிலாமணியே, உயர்மாணிக்கமே, அடியேன் படும்துயர் நீயறியாததோ. என்னையாட்கொண்டு அருள்புரிவதுமக்கரிதோ. பற்றுநான் மற்றிலேன்கண்டாய், ஆதரிப்பது உன்பாரம் ஐயா, இப்பிறப்பிணியகற்றி என்னை ஈடேற்றுவாய் ஈசா, திருப்புன்கூர் நாதா" என்று பலவாறுபோற்றிப் பன்முறையும் கோயிலைவலம்வந்து அடியார்கள் கூட்டம் கலைந்து செல்லும்நேரம்வரை ஆடிப்பாடிக்களித்து அருட் பெருஞ்சோதியையே மனத்திற்கொண்டு ஆனந்தப்பரவசனாய்த்தன் இல்லமேசென்றான். இவன் மனதில் ஒருதரமாயினும் சிதம்பரம்சென்று ஆனந்த நடராஜனை தரிசிக்கவேண்டும் என்ற ஆசை அதிகரித்துக்கொண்டேவந்தது.

VI

சிவாலய உற்ஸவங்கள் வரும் சமயமெல்லாம் சிதம்பரம் ஞாபகம்வந்துவிடும். இந்தக்கட்டை இருக்கையிலேயே சிதம்பரம்போய்வரவேண்டும். ஒருதரமாயினும் சிதம்பரநாதனைக்கண்டு சேவித்திடவேண்டும். என்றைக்குப் போவோம், ஐயன் உத்தரவு

பெற்று நாளைக்குப்போவேன், நாளைக்குப்போவேன், என்று சொல்லிக்கொண்டே நாட்களைக்கழித்துக்கொண்டிருக்கிறான். ஆனதுபற்றியே இவனுக்குத் "திருநாளைப்போவார்" என்று ஒருபெயரும் ஏற்பட்டது. ஏன் இந்த ஜன்மம் எடுத்தோம்? அடிமைத்தொழில் மிகவும் கடுமையே, என்னிஷ்டப்படி ஸ்தலயாத்திரை போக முடியவில்லையே, இவ்வவயவங்கள்பெற்றதன் பயனை அனுபவிக்கமுடியவில்லையே, அடிமைத்தொழில் பூண்டு அவலமாய் நாட்களைப்போக்கவா, இக்கரசரணாதி அவயவங்கள் ஏற்பட்டன. ஹே பாதங்களே! சிதம்பரக்ஷேத்ரம் நடந்துசெல்லும்பாக்கியம் நீங்கள் பெறவில்லையோ! ஹே கைகளே! சிதம்பரநாதனைக் கூப்பித்தொழும் பாக்கியம் நீங்கள் பெறவில்லையோ. ஹே தேகமே சிதம்பரநாதன் கோயிலைச்சுற்றி அங்கப்பிரதட்சணம் செய்துவரும் பாக்கியம் பெறவில்லையோ, ஹே கண்காள், சித்ஸபேசன் எழுந்தருளியிருக்கும் திவ்யகோயில், கோபுரம், மதில்களைக் கண்டுகளிக்கும் பாக்கியம் பெறவில்லையோ, ஹே செவிகாள் சித்விலாசன் திவ்ய நாமங்களை ஒதி, வேதமந்தரங்களால் பக்தர்கள் போற்றும் திவ்ய நாதத்தைக்கேட்கும் பாக்கியம் பெறவில்லையோ? ஹே மூக்கே! சுந்தரமூர்த்திக்கு ஸமர்ப்பிக்கும் தூபதீபவாஸனையையும் பத்ரபுஷ்பங்களின் வாசனையையும் முகரும் பாக்கியம் பெறவில்லையோ, ஹே வாயே! சுகுணவிலாசன் அனந்த கல்யாணகுணங்களைப்புகழ்ந்துபோற்றும் பாக்கியம் பெறவில்லையோ, ஹே மனமே! சுவயம்ப்ரகாசனை நினைந்து நினைந்து ஆனந்த பரவசனாகும் பாக்கியம் பெறவில்லையோ,

என்றிவ்வாறு பிதற்றிக்கொண்டும், தில்லை க்ஷேத்திரத்தையே சதா நினைத்துக்கொண்டும் தன்னை, ஆட்கொண்டிருக்கும் அந்தணன் காரியங்களைக்கூட விசேஷமாக கவனியாது நந்தன் காலம் கழித்துவந்தான். இதுதான் சமயமென்று இவனை வெறுத்துவந்த இவன் இனத்தவர் அந்தணன்பாற் சென்று இவனைக் கண்டபடி தூஷித்துக் கூறலானார்கள்.

VII

"ஆண்டே கும்பிடுகிறோம். உங்கள் அடிமைக்காரப் பறையன் காரியங்களெல்லாம் மிகச் சீர்கெட்டுவிட்டன, வெறிகொண்டவன்போல் கூத்தாடுகிறான். அங்குமிங்கும் அலைகிறான். ஆடிப்பாடி அழுகிறான். வெட்டவெளியைக்கண்டு பிரமித்துத் தன்னைத்தான் மறந்து சிரிக்கிறான். பண்ணைவேலைகளைப் பார்ப்பதில்லை. எங்களுடன் சேர்வதில்லை. வீட்டில் நேராய்த் தங்குவதில்லை. கோயில், குளம் கண்டபக்கமெல்லாம் முழுகிக் கும்பிடுகிறான். தன் கூலியையெல்லாம் குளம்வெட்டிச் சாவடிகட்டித் தொலைத்துவிடுகிறான். பெண்டு பிள்ளைகளை கவனிக்கிறதில்லை. தங்கள் கழனியில் இன்னம் நாற்றுநட்டாகவில்லை. வரப்புஎடுத்துக் கட்டியாகவில்லை. நீர்வடிகால் வெட்டியாகவில்லை. நாற்றுங்காலெல்லாம் புல்லும், பூண்டும் முளைத்துப்பாழாய்ப்போய்விட்டன. ஆடுமாடுகள் மேய்ந்தால் ஓட்டுகிறதில்லை. சிதம்பரம், சிதம்பரம் என்றே சொல்லித் திரிகிறான். புத்திமாறுட்டம் ஏற்பட்டுவிட்டது. சேரி

யில் பற்பல உற்பாதங்கள் காணப்படுகின்றன. எல்லாம் இவன்சேஷ்டையால் ஏற்பட்டிருக்கின்றன. வீரன், இருளன், காட்டேரிக்கு எருமைகளை பலிகொடுத்துப் பூஜைகள்போட்டோம். சண்டி, மொண்டி, சாமுண்டிக்கு ஆட்டுக்கடாக்கள் பலிகொடுத்துப் பூஜைகள்போட்டோம். தொட்டியச்சின்னான் பாவாடை, காளி, சாமுண்டிக்குச்சாற்றினேம் குடம் குடமாகக் கள்ளும், சாராயமும். சேரிக்கு நற்காலம் பிறக்கவில்லை. நந்தனும் எங்கள் சுவாமிகளைக் கும்பிடுகிறதில்லை. எங்களுடன் உட்கார்ந்து சாப்பிடுகிறதில்லை. எங்களுடன் வார்த்தையாடுகிறதுமில்லை. நாங்கள் சொல்வதைக்கேட்கிறதுமில்லை. என்னசெய்வோம். இந்த வருஷம் தங்கள் மகசூல்கெட்டுத்தான் போகும். தங்கள் கழனிகளையும் பாருங்கள். மற்ற கழனிகளையும் பாருங்கள். அவனைக்கண்டிக்கவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார்கள். "யோக்கியன்போல் நடித்துவந்தானே, இவனைநம்பி நான் வேலைகளை மேற்பார்வைகூடப்பார்க்கவில்லையே, இருக்கட்டும், கூப்பிட்டு விசாரிக்கிறேன்'' என்றுசொல்லி நந்தனுக்கு ஆள்விட்டான். நந்தன் வந்தபிறகு "நந்தா என்னசேதி? பண்ணையில் காரியங்கள் சரியாய்ப்பார்த்து வருகிறாயா? விளைவு என்னவாயிருக்கிறது? நான் பார்த்து நெடுநாளாயிற்றே'' என்றான்.

VIII

"அய்யரே ஒருசேதி, ஆசையாய்ச்சொல்லுகிறேன். பையவே சிதம்பரம் சென்றுவர ஆசைகொ

ண்டேன். அம்பலத்தரசை, என் அருமருந்தை, ஆனந்தத்தேனை, அருள்விருந்தை, பொது நடத்தரசை, புண்ணியனை, புலவர்களெல்லாம் போற்றும்கண்யனைக் கண்டுஸேவித்து வருகிறேன். ஐயனே போய்வா என்று சொல்லவேண்டும் புண்யனே" என்று நந்தன் பிராமணனைக்கேட்டான். "நான்கேட்டதற்கு இதுதானைபதில். சேரியிலில்லாத வழக்கம், ஜாதிக்கடுக்காத புத்தி, இந்தஎண்ணம் உனக்குவேண்டாம். நான்சொல்வதைக்கேள்" என்றார் அந்தணரும். "எல்லாரையும் படைத்தளித்த ஈசனிடம் பாரபட்சமுண்டோ? எல்லாரையும் சமமாகப்பாவிப்பார் என்நாதன்" என்றான் நந்தன். "தேரும் திருநாளும் அடிமைக்காரப் பறையனுக்குமுண்டோ?" என்று அந்தணர் கேட்டார். ஆண்டவனுக்கு அடிமை ஆண்டவனைக்காணல் கூடாதோ? என்றான் நந்தன். "மட்டிப்பயலே எட்டிப்போடா, கட்டிப்பேசாதே" என்று பிராமணர் சொன்னார் "அய்யனே உம்மைப்பணிந்தேன், தப்பரைக்கண்டு உய்யவே அருள்புரிவீர்" என்று நந்தன் வேண்டினான் "வயல்களைப்பார்த்துவாடா, பறப்பயலே, பித்தன்போல் உளராதே போடா" என்று அதட்டினார் அந்தணர். "ஆண்டே அடிமைபித்தம் தெளிய மருந்துண்டு சிதம்பரமொன்றிலே. போய்ப்பருகிவாரேன்" என்று நந்தன் சொன்னான். "அடே அந்தணர்போற்றும் தெய்வமடா உன்னை அருகில்விடச்சம்மதியாரடா" "உலகுக்கோர்பானுவேயல்லால்பலபானுக்கள் உண்டோபகருவீர்சுவாமி" "அதிகப்பரஸங்கம் பேசாதே, கழனிவேலைகளைகவனித்துவா. வீணில் என்காணிகளைப்பாழாக்கினையேமூடா" "ஆண்

டவன் அருள்பெறவே சிதம்பரம் செல்லவேண்டும் விடைதாரும் சற்குணசீலரே." "நானேசொல்கிறேன் உனக்குத்தக்கபுத்தி எதிரில் நில்லாதேபோடா" என்றுசொல்லி நந்தனை அனுப்பிவிட்டார்.

IV

"ஹே சிவ சிவ சங்கர சிவகாமி நாயகா, ஹர ஹர சங்கர அபிராமி நாயகா. ஹர ஹர சுந்தர மீனாட்சி நாயகா, ஹர ஹரதர்ம சம்வர்த்தனீ நாயகா, ஹரசம்போ மஹாதேவா, பார்வதிரமணா, பரமேசா, ஜகதீசா, விசுவேசா, என்செய்வேன் என்னையாட்கொண்ட அந்தணனே நானேகழனிக்குவருவான். எல்லாம் பாழாயிருக்கிறதே, உன்னைக்காணவேண்டும் என்கிற ஆசையால் உனது திவ்ய சிதம்பரக்ஷேத்ரம் செல்லவேண்டுமென்கிற ஆசையால் ஒன்றுமேசெய்யாது மதிமங்கி மோசம்போனேன். கோபக்காரப் பார்ப்பான் என்னசெய்வானோ, உன்னையல்லா லுற்றதுணை வேறுமுண்டோ. சம்போசங்கர கௌரீசா, சாம்பசங்கர கௌரீசா என்று விசாரப்பட்டுக்கொண்டு ஈசுவரனைப்போற்றிய வண்ணம் நித்திரையின்றி படுத்திருக்கும் சமயம், பாதிராத்திரிக்குமேல் ஓர் சித்தராகத்தானே நந்தன் முன்தோன்றி "நந்தா, புறப்படு சிதம்பரம். பயப்படாதே. நானே கழனிக்குச்சென்று வேடிக்கைபார். உன் ஐயர் அனுமதிகொடுப்பார், சிதம்பரத்து அந்தணரும் உன்னை ஏற்றுக்கொள்வார். நீயும் மேன்மையடைவாய். விசாரத்தை விட்டுவிடு நிம்மதியாய்க்

தூங்கு" என்றிவ்வாறு சொல்லிமறைந்தார். நந்தனும், கனவோ, நினைவோ, கண்டகாட்சி, என்மனத்தை விட்டகலவில்லை சொன்னவார்த்தைகள். கருணாநிதி என்னையும் ஆட்கொள்வரோ என்று படுத்து பகவானைப்பாடி விடியற்காலமே கழனிக்குச்சென்றான்.

அன்றிரவே சிதம்பரம் தீக்ஷிதர்கள் ஒவ்வொருவர்கனவிலும் ஈசன்தோன்றி, "நந்தன் எனது சிறந்த பக்தன். நீசன் என்று தள்ளிவிடாதேயுங்கள். செந்தணல் குளிக்கச்செய்து அந்தணன்போல் ஏற்றுக்கொள்ளுங்கள் என் திவ்யதரிசனம் செய்துவையுங்கள்" என்று சொல்லிமறைந்தார்.

நந்தனுடைய எஜமானனாகிய அந்தணரும் விடியற்காலம் எழுந்து கழனியைப்போய் பார்த்தார். எல்லாவயல்களையும்விட தனதே சிறந்துவிளங்குகிறது. ஆச்சரியப்பட்டார். ஏதோவிசேஷம் இருக்கிறது, நந்தனையும் பறையர்களையும் கூப்பிட்டு விசாரிப்போம் என்று இருந்தார்.

V

பறையர்களும் வந்தார்கள். நந்தனும்வந்தான். வயல்களைப் பார்த்தார்கள். பிரமித்துப்போனார்கள். "அடே பறையர்களே. என்ன சொல்கிறீர்கள். நந்தா என்ன விசேஷம். நீ நம்மவயல்வேலைகளைச் சரிவரகவனிக்கவில்லையே இப்போது இப்படியிருக்க என்ன செய்தாய்" என்றுகேட்டார். "ஐயனே ஒன்றும் அறி

யேன், என்னையாட்கொண்ட ஈசன் திருக்கூத்து இது என்று சொல்லிப்பரவசமானான். மற்ற பறையர்களும் நந்தன் மேலிருந்தவெறுப்பைவிட்டு அவனையும் அவனுடைய பக்தியையும் கொண்டாடினார்கள். பார்த்தான் வேதியன். என்னகாரியம் செய்தோம். அநியாயமாக நந்தனைத்திட்டினோமே. பித்தன் பைத்தியகாரன் என்று தூஷித்தோமே. சுவாமிதரிசனத்திற்குப்போகக்கூடாதென்று தடுத்தோமே. வீணில் சிவாபராதத்திற்கு ஆளானோமே. இனி இவனை இங்கு அடிமையாக வைத்திருக்கக்கூடாது. இவன் இஷ்டப்படி சிவஸ்தலங்கள் சென்று சேவித்துவரட்டும். இவன் குடும்பத்தை நாமே காப்பாற்றிவருவோம்'' என்று நிச்சயம் செய்துகொண்டு நந்தனைப்பார்த்து, "நந்தா நீ ஒரு சிவபக்தன். இதை அறியாமலே மோசம்போனேன் நான் ஒரு பித்தன். உன்னிடம் அநியாயமாய் வேலைவாங்கினேன். உன்னுடைய உண்மை பக்தியை அறியாமல் உன்னை ஏசினேன். நீயே எல்லாரிலும் சிறந்தவன். அந்த ஈசன் பெருமையை எனக்கும் கற்றுக்கொடப்பா. சிதம்பரம்போய்வா சுந்திர மனோகரனை ஸேவித்துவா. என்னையும் கடைத்தேறச் செய்வாய்'' என்று சொல்லும்வேளை நந்தனும், "அடிமைக்காரப் பறையன் ஐயா, எடுத்த ஜன்மம் இது பாவமூட்டை ஐயா, கர்மங்கள் தொலையவேணும் ஐயா, மர்மம் அறிந்து போற்ற வேணும் ஐயா, ஐந்து புலன்களையும் அடக்க வேண்டும் ஐயா, ஐந்தெழுத்தை உச்சரிக்க வேண்டுமய்யா, சிதம்பரம் போக உத்திரவு தாரும் ஐயா. போற்றினேன் உம்மை, ஏற்றினேன்

ஐயா" என்றிவ்வாறு சொல்லி அவர் உத்தரவுபெற்றுக்கொண்டு சிதம்பரம் சென்றான்.

XI

சிதம்பரத்தின் எல்லைவந்து சேர்ந்தான். கோபுரங்களின் பெருமையைக்கண்டு கொண்டாடினான். ஊரின் அழகைக்கண்டு புகழ்ந்தான். கோயில்மதில்களைக்கண்டு களித்தான். கொடிகள் ஆடுவது கண்டு தன்னை அழைப்பதாகவெண்ணிக் குதூகளித்தான். கோயிலைச்சுற்றி வலம் வந்தான். சிவநாமாவளிகளையே உச்சரித்துக்கொண்டு சென்றான். "சங்கரப்ரபோ, சம்போ மஹாதேவ, சங்கரப்ரபோ, சாம்பசிவ சாம்பசிவ சாம்பசிவ சாம்பா, நடராஜா நடராஜா நர்த்தன சுந்தர நடராஜா, சிவராஜ சிவராஜ சிவகாமிப்ரிய நடராஜா, கனகசபேசா நடராஜா, சிதம்பரவாஸா ஜகதீசா" என்று நர்த்தனம் செய்துகொண்டும், தாளம் போட்டுக்கொண்டும் ஆனந்தமேலிட்டால் தன்னை மறந்தவனாய்ப் பாடிக்கொண்டுவரும் சமயம், சிதம்பரம் தீட்சதர்களெல்லாரும் ஒன்றுகூடித் தங்கள் கனவைப்பற்றி பேசிக்கொண்டு, நந்தனிருக்குமிடம் வந்தார்கள். அவனைக் கண்டார்கள். அக்னிகுண்டம் வளர்த்தி அவனைநீராடி வரச்செய்து வேதமந்திரங்கள் ஓதி அவனைத் தீக்குளிக்கச்செய்து புனிதனாக்கி சிவதரிசனத்திற்காக அழைத்துச் சென்றார்கள். போகும் வழியில் நந்தன் பதஞ்சலிவ்யாக்ரபாதர் கண்டுகளிக்க ஆடியபாதம், அம்மை சிவகாமி சுந்தரி மெச்சவாடியபாதம்,

பற்றியவர் பற்றை அறவேபோக்கும்பாதம், பறைய னைப்பாலித்தருளும் பாதம், நிவ்ய சுந்தர நடராஜமூர் த்தியின் குஞ்சிதபாதமே.மறைகள் எற்றும் நாமம்,சுர ர்கள் போற்றும் நாமம், மங்கள மளிக்கும் நாமம், எங் கள் குறைதீர்க்கும் நாமம், சனகாதி யோகிகள் போ ற்றும் நாமம், ஜனனமரணமகற்றிடும் நாமம், பேரான்ப மளிக்கும் நாமம், என் மனத்துற்ற சிவநாமமே" என்று சொல்லிக்கொண்டு தன்கனவின் பெருமையை யும், அதன் உண்மையையும் பற்றிச்சிந்தித்துக்கொண் டே கைகள் கூப்பியவண்ணமாய் கனகசபேசன் சன் னிதிமுன் போய்நின்று மன முருகிப்போற்றினன்.

XII

"என் அம்மையே, அப்பனே, ஒப்பிலாமணியே, அருளுடைச்சுடரே, அத்தனே, சுத்தனே, சித்தனே, மருவார் கொன்றை மதிசூடி, மதயானையுரிபோர்த்த வா, மானேர்நோக்கி மணாளா,மருவிய கருணைமலையே, விண்ணோர்தலைவா, வெண்புறி நான்மார்பா; புலையனெ ன்று அகற்றிடாமல் ஆட்கொண்டநாதா முக்திதரு வேனென்றபோதா, தளர்ந்தேனடியேன், தரிக்கிலேன் காயவாழ்க்கை, சங்கராபோற்றி,நித்தாபோற்றி,நிமலா போற்றி, நஞ்சசே யமுதா நயந்தாய்போற்றி, வருக வென்றென்னை நின்பால் வாங்கிடவேண்டும். போற்றி யோ,நமச்சிவாயாபோற்றியோ நமச்சிவாயா,புகலிடம் பிறிதொன்றில்லை, தமியனேன் தனிமைதீர்த்தே தருக நின்பதம்போற்றி போற்றி, ஹாலாஸ்ய சுந்தரம், மீனு

ட்சி சுந்தரம், கல்யாண சுந்தாம், கதம்பவன சுந்தரம், “ஹர ஹர சம்போ, கிரிஜாபந்தோ, சிவ சிவ சங்கர பூதபதே” சிவகாமிப்ரிய சிதம்பரேசா, சிவகங்காதட வாஸநடேசா, நடராஜம், நடராஜம், நடராஜம், பஜநட ராஜம், “சிவ சிவ சிவ சிவ சிவ மந்தாம் சிவ பஞ்சாட் சர பாதந்தாம்” என்று இவ்வாறு போற்றும்வேளை, அனைவரும் கண்டுகளிக்க ஓர் பெருஞ்ஜோதி தோன்ற அதனுட்கலந்து ஐயனோடு ஐக்கியமானார் நந்தனும்.

நீசனாயினும் நந்தன் கடவுளால் கைவிடப்பட் டானோ! பலரறிய அவன் பெருமையைக்காட்டி அவனை ஏற்றுக்கொள்ளவில்லையா! ஆகவே யாரேயாயினும், எவ்வகைத் தொழிலிலிருப்பினும் பக்தியுடன் பரமன்பதம் பணிவார், ஏற்றமுறுவார் என்பது திண்ணம். எல்லாரும் சர்வேசுவரன் கருணையைக் கொண்டாடினார்கள். நந்தன் பக்தியை மெச்சினார்கள்.

“பொங்கும் மங்களம் எங்கும் ஓங்குக.”

ஸ்ரீ வாணீ
விலாஸ் பிரஸ்,
ஈரோடு.

தேவயான புத்தகங்களுக்கு அடியிற்கண்ட

விலாசத்திற்கு எழுதவும்.

ஸ்ரீ வாணீ விலாஸ் கம்பெனி,

அச்சாபீஸ் & புத்தக வியாபாரம்,

ஈ ரோ டு.

Printed at Sri Vani Vilas Press, Erode.